**லங்கா கனியமணல் கம்பனி - 2020**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா கனியமணல் கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனம் ஒன்றினால் முன்னைய காலப் பகுதிக்கான பொருண்மையான பிழைகள் கண்டுபிடித்த பின்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) இலக்கம் 8 இன் பிரிவு 42 இன் பிரகாரம் அவை கடந்த காலத்துக்கு பொருத்தமாக சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஆகஸ்ட் 12 திகதி கொள்வனவு செய்து அவ்வாண்டிலேயே பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 71,565,328 தொகை பெறுமதியான Wet High Intensity Magnetic Separator With a Control Panel Board இயந்திரம் 2020 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த இயந்திரம் ஒன்றென | நிறுவனத்தினால் இயந்திர அறையுடன் கலந்துரையாடி 2020 ஆண்டின் மூலதன சொத்து ஒன்று என கணித்து 2020 ஆண்டின் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்காக சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வுக் காலப் பகுதிக்குரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்குகளுக்கு எடுக்கப்பட்டு 2019 ஆண்டிற்கான ரூபா 2,981,890 தொகைக்கான பெறுமானத் தேய்வு முன்னைய ஆண்டிற்கான இலாபத்துடன் சீராக்கல் செய்யாமல் 2020 ஆண்டின் வருடாந்த பெறுமானத் தேய்வுடன் கூட்டி சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | | |
| (ஆ) ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 51 இன் படி சொத்துக்களின் பயன்தரக் கூடிய ஆயுட்காலம் குறைந்த பட்சம் அனைத்து ஆண்டுகளிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், பயன்தரக்கூடிய ஆயுட்காலம் முன்னைய மதிப்பீடுகளை விட வித்தியாசம் எனின், வித்தியாசங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 8 இன் படி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 175,746,070 தொகை கிரயத்தையுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 45,294,704 தொகை கிரயத்தையுடைய கட்டடங்களின் பயன்தரக்கூடிய ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து அதன்படி கணக்கீடு செய்ய வேண்டும். | இந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக மீள் மதிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும் உலகலாவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் அதனை மேற்கொள்வதற்கு முடியாமல் போனது. | நியமத்தின் ஏற்பாடுகின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து அதன்படி கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது விற்பனவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்காத பலவகையான கனியங்களின் இறுதி இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யும் போது புத்தக மீதி மற்றும் பௌதீக மீதி இடையே 4,991 மெட்ரிக் தொன் முதல் 1,274 மெட்ரிக் தொன் இற்கான வீச்சில் மிகைகள் மற்றும் பற்றாக்குறை வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தது. இருப்புக்களில் ஏற்பட்டிருந்த இந்த வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங் காணாமல் மற்றும் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இருப்புக்களுடன் சீராக்கல்கள் செய்யப்பட்டு அதற்குப் பொருத்தம் இல்லாத உற்பத்திக் கிரயம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளுக்கு சீராக்கல் | இருப்பு மாற்றங்களுக்கான சீராக்கல்களின் போது இருப்பு கிரயம் வியாபாரக் கணக்குகளில் (Trading A/C s) மற்றும் இருப்புக் கணக்குகளில் (stock A/C s) சரியாக சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. | மேந்தலைக் கிரயம் கணிக்கப்பட்டு முடிந்த பின்னர் இருப்புகளுக்கு மீண்டும் மேந்தலைக் கிரய சீராக்கல் மேற்கொள்ளப்படக் கூடாது அத்துடன் பௌதீக இருப்பு வித்தியாசத்தை மாத்திரம் உரிய இருப்புக் கணக்குடன் சீராக்கல் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டமையால் இறுதி இருப்பு மற்றும் ஆண்டிற்கான இலாபம் ரூபா 40,277,578 இனால் அதிகரித்திருந்தது. | | |
| (ஆ) | இல்மனைடிற்காக பெறப்படுகின்ற சொரசொரப்பான மணல் இறுதி இருப்பு 151,762 மெற்றிக் தொன்கள் எனினும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 149,065 மெற்றிக் தொன்கள் ஆகும். அதன்படி, 2,696 மெற்றிக் தொன்கள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் சொரசொரப்பான மணல் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 1,058,233 தொகை குறைவாக மற்றும் B இயந்திர அறையின் உற்பத்திக் கிரயம் அந்த எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுரியான இருப்புப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஜனவரி 09 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனியினால் ரூபா 500 மில்லியன் தொகையொன்று மட்பாண்ட கூட்டுத்தாபன ஊழியர் நட்டஈடு வழங்குவதற்காக அரச மூல வளங்கல் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு 2012 ஜனவரி 10 திகதி வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த கடன் தொகைக்காக ரூபா 103,484,290 இற்கான ஐயக்கடன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 517,421,448 தொகைக்கான கடன் தொகை மற்றும் வட்டி மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு தற்போது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் நிறுவனத்தினால் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபத்திற்காக வருடாந்தம் ரூபா 50 மில்லியன் தொகை வீதம் பங்கிலாபத்திற்கு பிரதியீடு செய்வதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டளவில் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த ரூபா 25,000,000 தொகை மற்றும் ரூபா 5,000,000 ற்கான கடன் தொகையினை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கிடைக்க வேண்டிய ரூபா 25 மில்லியனிற்கு பொருத்தமாக காணியொன்று பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை விற்பனை செய்த பின்னர் நிறுவனத்தின் பணத்தை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. | நிதிக்கூற்றுக்களில் போதியளவு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | சிதைவடந்துள்ள மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கம்பனிக்கு சொந்தமான 08 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களை விற்பனை செய்வதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை விதிமுறைகளின் படி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) 2020 ஜனவரி 27 திகதிய 1/2020 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 06 துறைகளின் கீழ் பணிப்பாளர்கள் 03 பேர் வீதம் உப குழுக்கள் நியமிக்கப்பட்டு புல்முடே வெளிக்கள சுற்றுலாவிற்காக ரூபா 200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன. பணிப்பாளர் சபை கூட்டங்களுக்காக மாதாந்த கொடுப்பனவு ரூபா 25,000 தொகையினை மிகைக்கக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டங்களில் பங்கு பற்றிய இருவருக்கு அந்த வரையறையை மிகைத்து ரூபா 60,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. வெளிக்கள சுற்றுலா தொடர்பாக அறிக்கைள் ஏதும் அந்த உத்தியோகத்தர்களினால் கம்பனிக்கு வழங்கியிருக்கவில்லை. | கம்பனி சிக்கனமாகவும் செயற்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் குறிப்பிட்ட காலப் பகுதியில் சட்டங்கள் விதிகள், பெறுகை நடைமுறை என்பவற்றை செயற்படுத்தப்படுகின்றன. | சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு முரணாக செயற்படக் கூடாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,797,328 இற்கான நட்டம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,277,746,050 தொகை ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 2,328,543,378 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இல்மனைட் விற்பனை கேள்விகள் இரத்துச் செய்யப்படல், இருப்புக்கள் விற்பனை செய்யப்படாமை, இருப்புக்கள் அகற்றறப்படாமையால் களஞ்சிய வசதிகள் போதியளவினதாக காணப்படாமை. களஞ்சியங்கள் நிறைந்திருந்தமையால் இல்மனைட் உற்பத்தி சுமார் 06 மாதங்கள் மேறகொள்ளப்படாமை இந்த பின்னடைவிற்கு பிரதானமான காரணமாகியிருந்தது.

### 2.2 பிரதான செலவு மற்றும் வருமான விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

கம்பனியின் தேறிய விற்பனை 2019 ஆண்டிற்கு நேரொப்ப 2020 ஆண்டின் போது 82% இனால் குறைவடைந்து இருந்ததுடன் அதற்கு நேரொப்ப விற்பனை கிரயம் 71% இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த விற்பனவு கேள்விகள் இரத்துச செய்யப்படல் மற்றும் 85,000 மெட்ரிக் தொன் இல்மனைட் கேள்வியில் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் 5,032.86 மெட்ரிக் தொன் மாத்திரம் விடுவிக்கப்படுகின்றமையால் வருமானம் குறைந்திருந்த காரணத்தினால் இந்த பின்னடைவு ஏற்படுவதற்கு பிரதானமான காரணமகாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இல்மனைட் 85,000 மெட்ரிக் தொன்களுக்காக கேள்விக்காக 04 விலைகூறல்கள் கிடைத்திருந்ததுடன், 01 மெட்ரிக் தொன் இற்காக 165.20 அமெரிக்க டொலர்களுக்கான கூடிய விலைகூறல் முறையான பொறுப்புக்கள் உடனான விலைகூறல் பாதுகாப்பு முறியொன்று காணப்படவில்லை என குறிப்பிட்டும், 163 அமெரிக்க டொலர்கள் குறிப்பிடப்பட்ட இரண்டாவது விலைகூறலுக்கு 5,000 மெட்ரிக் தொன்கள் மாத்திரம் என குறிப்பிடப்பட்டு இரத்துச் செய்திருந்தது. கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சமர்ப்பித்திருக்காத மூன்றாவது விலைகூறல் ஆகிய 147 அமெரிக்க டொலர்களுக்கு இணங்கியிருந்த விலைகூறல்தாரர்களுக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரருக்கு கேள்வியினை வழங்குவதற்கு | பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்துடன் 147 அமெரிக்க டொலர்களுக்காக இணங்கி விலைகூறல்தாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையை கடைபிடித்து உச்ச மட்ட போட்டி அடிப்படையில் கூடிய விலை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் நிறுவனத்திற்கு அனுகூலமான முறையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்கியிருக்காமையால் மெட்ரிக் தொன் 01 இற்கு 18.20 அமெரிக்க டொலர் வீதம் 85,000 மெட்ரிக் தொன்களுக்காக 1,547,000 அமெரிக்க டொலர்கள் இற்கான நட்டமொன்று நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது. 147 அமெரிக்க டொலர்கள் வீதம் 85,000 மெட்ரிக் தொன்கள் 130 நாட்களுல் விடுவிப்பதற்கு இணங்கி 2020 ஒக்தோபர் 28 திகதி இல்மனைட் விற்பனை செய்யும் கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் 25,000 மெட்ரிக் தொன்களுக்காக 3,675,000 அமெரிக்க டொலர்கள் செலுத்தி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 5,032.86 மெட்ரிக் தொன்கள் மற்றும் 2021 மார்ச் இறுதியளவில் மேலும் 2,940,000 அமெரிக்க டொலர்கள் செலுத்தி 30,000 மெட்ரிக் தொன்கள் அப்புறப்படுத்தியிருந்தது. மீதிதத் தொகையாகிய 5,880,000 தொகை அமெரிக்க டொலர்களை 2021 மார்ச் இறுதி வரை செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி ஒன்று 30 வருட குத்தகைக்கு ரூபா 24,220,118 தொகை செலுத்தி கனியமணல் கம்பனியின் தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2013 ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது. 15,325 சதுர அடிகளைக் கொண்ட 06 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 171,453,486 இற்கு (பெறுமதி கூட்டியவரி இன்றி) 2018 மார்ச் மாதத்தில் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.6 இன் பிரகாரம் விலைகூறல்தாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உடனடியாக முறைப்பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதப்பட்டு கையொப்பமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு சட்டரீதியான கடப்பாடு ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டிருந்தது 2020 பெப்ரவரி 26 திகதி அதாவது | அவ்வப்போது முகாமைத்துவத்தில் மாற்றங்கள் காரணமாக கட்டடத்தின் நிர்மாண வேலை 02 வருடங்கள் தாமதம் அடைந்தது. தற்போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பாராட்டக்கூடிய மட்டத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. ஒப்பந்த உடன்படிக்கையின் விலைகூறல் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனே கையொப்பமிட முடியாமல் போனதுடன், CIDA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த Form of Agreement (Refer SBD 02) பயன்படுத்தி நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்காக தேவையான ஒப்பந்த வேலை கையொப்பமிடப்பட்டது. ஒப்பந்த வேலைத் தொயில் மற்றங்களுக்காக மாத்திரம் தீர்மானம எடுப்பதற்காக சந்தர்ப்பம் | பிரதான விவரக் குறிப்புக்கள் உட்பட முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளல் மற்றும் தலைமை அலுவலக கட்டட நிர்மாண வேலை விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு 02 வருடங்கள் கடந்த பின்னர் ஆகும். எனினும் இந்த உடன்படிக்கையில் ஒப்பந்த வேலைக் கிரயம், கொடுப்பனவு நிபந்தனைகள், ஒப்பந்தக் காலம் போன்ற பிரதான விவரக் குறிப்புக்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>2020 மார்ச்சில் கட்டடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 07 வருட காலம் இந்தக் காணி செயற்படாமல் காணப்பட்டது. 30 வருட குத்தகைக் காலத்தில் 2020 மார்ச் இறுதியளவில் 08 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் 06 மாடிகளைக் கொண்ட இந்த கட்டடத்தின் 04 மாடிகள் வரை உயர்த்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நிபந்தனைகள் மற்றும் விவரக் குறிப்புக்கள், ஒப்பந்த வேலை விலைகூறல் வழங்கப்பட்ட போது இணங்கிய விதத்தில் காணப்பட்டது. | |
| (இ) | பொடுவக்கட்டுவில் இருந்து பார கனிய மணல் புல்மோட்டை இயந்திர அறைக்கு எடுத்துச் செல்லல் மற்றும் காணியை மீள் நிரப்புதல் மற்றும் மணல் எடுத்துச்செல்வதற்காக 01 மெட்ரிக் தொன் இற்கு ரூபா 234 கூறுவிலைக்கான கேள்வியை சமர்ப்பித்திருந்த 06 விலைகூறல்தாரர்களில் ஒருவரை தெரிவு செய்து 2020 மே 27 திகதி கேள்வி வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த விலைக்கு விலைகூறல்தாரர் கனிய மணல் எடுத்துச் சென்றிருக்கவில்லை.<br>இணங்கியிருந்த தொகைக்கு கனிய மணல் எடுத்துச் சென்றிருக்காத விலைகூறல்தாரருக்கு எதிராக கம்பனி எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன், மீதியான உள்ள விலைகூறல்தாரர்களுக்கு மணல் எடுத்துச்செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் 2020 ஜூலை 11 திகதி கம்பனியினால் மெட்ரிக்தொன் ஒன்றிற்கு ரூபா 320 வீதம் செலுத்துவதற்கு இணங்கி முதலாவது விலைகூறல்தாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. ஆரம்ப விலைகூறல் வழங்கப்பட்டதன் படி கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த தொகை ரூபா 20,439,258 தொகை எனினும் விலை மாற்றம் செய்யப்பட்ட ரூபா 27,836,420 தொகை வழங்குனருக்கு | பதில் வழங்கியிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்து நிறுவனத்திற்கு அனுகூலமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்தமையால் கம்பனிக்கு ரூபா 7,397,161 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆண்டின் போது கம்பனி எதிர்பார்த்த மொத்த கனிய விற்பனை எண்ணிக்கை 113,996 மெட்ரிக் தொன்கள் ஆகும். மற்றும் அவற்றின் விற்பனை பெறுமதி ரூபா 4,660,524,000 தொகை எனினும், உள்ளவாறான விற்பனை எண்ணிக்கை 14,955 தொகை மெட்ரிக் தொன்களாக காணப்பட்டதுடன் அவற்றின் விற்பனைப் பெறுமதி ரூபா 696,597,134 தொகையாக இருந்தது. சர்வதேச போட்டி விலைகூறல்களின் கீழ் முன்வரக்கூடிய கொள்வனவாளர்கள் வரையறையாதல், பல்வேறு காரணங்களினால் கேள்விகள் இரத்துச் செய்யப்படல், ஒரே தடவையில் பாரிய இருப்பொன்றினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற காரணங்களினால் இவ்வாறு எதிர்பார்த்த இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டின் போது முறைப்பிரகாரம் விற்பனவு நடைபெறாமையால் நிறுவனத்தின் நிதி நிலைமை சீரற்றதாக மாறி திரவத்தன்மை குறைந்ததனால் நாளாந்த தேவைகளுக்காக பல சந்தர்ப்பங்களில் ரூபா 450,000,000 தொகைக்கான 6 நிலையான வைப்புக்கள் முதிர்வடைவதற்கு முன்னர் திருப்பப் பணம் பெறப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 7,573,770 இற்கான எதிர்பாரத்த வட்டி வருமானத்தை இழந்திருந்ததுடன், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் மத்தியில் எதிர்பார்த்த விற்பனவு நடைபெற்றிருக்காதது போலவே இருப்புக்கள் அகற்றப்படாமையால் களஞ்சிய வசதிகள் போதியளவாக காணப்படாமை மற்றும் இருப்புப் பாதுகாப்பு பலவீனமடைதல் போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு கம்பனி முகம் கொடுத்திருந்தது. | 2020 மார்ச் மாதம் கேள்வி அழைக்கப்பட்ட Rutile, Zircon, Hi Ti Ilmenite மற்றும் Ilmenite உட்பட LMS/MKT/TDR/2020/01 கேள்வி வாடிக்கையாளருக்கு வழங்குதல் நடைபெற்றது 2020 அக்தோபர் மாதத்திலேயே ஆகும். Covid – 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் எதிர்பார்த்த விற்பனை வருமானம் வீழ்ச்சியடைவதற்கு நேரிட்டது. | விற்பனையை அதிகரிப்பதற்கு, புதிய வாடிக்கையாளர்களைபெற்றுக்கொள்வதற்கு மற்றும் கேள்வி நடைமுறையில் குறிப்பிட்டுள்ளவாறு கடைபிடித்து இரத்துச் செய்தல்களை தவிர்த்துக்கொள்வதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | Block A பழைய இயந்திர அறையின் உற்பத்திக் கொள்திறன் சொரசொரப்பான மணல் உள்ளீடு ஒரு மணித்தியாளத்திற்கு 100 மெட்ரிக் தொன்கள் எனினும், தற்போதைய கொள்திறன் ஒரு மணித்தியாளத்திற்கு 40 மெட்ரிக் தொன்கள் மற்றும் 50 மெட்ரிக் தொன்கள் ஆகிய குறைவான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. முழுமையான கொள்திறனுக்கு ஏற்றவாறு உள்ளீடுகள் மேற்கொள்ளாமையால் கிடைக்கக் கூடிய குறைந்த வெளியீடுகள் ஒட்டுமொத்த தொழிற்சாலையின் செயற்பாடுகளுக்கு பிரதிகூலமாக தாக்கியிருந்தது. இந்த இயந்திர அறையின் Spiral வடிவமைக்கப்பட்டிருந்தது குறைந்த பார கனிய மணல் 40 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான கனிய மணல் ஒதுக்குவதற்காக எனினும், பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் படி 2019 மார்ச், ஏப்ரல், செப்தம்பர் மற்றும் 2020 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களின் பரிசோதனை அறிக்கைகளின் படி சில நாட்கள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் உள்ளீட்டு பார மணலின் சதவீதம் 40 சதவீதத்தை விட குறைவாக இருந்தது. | 65 வருடங்களை விட மிகையான காலம் முதல் புல்மோட்டையை கேந்திரமாக கொண்டு சொரசொரப்பான மணல் தோண்டப்பட்டமையால் இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. புதிய கனிய படிவின் பாரம் கனிய மணலின் இணைவு கூடிய பெறுமதி ஒன்று காணப்படுவதனால் எதிர்காலத்தில் பொருத்தமான உள்ளீட்டினை பயன்படுத்த முடியும். | கூடிய இணைவினை உடைய புதிய கனிய மணல் படிவினை கண்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு சொந்தமான ஆரம்ப மற்றும் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட இல்மனைட் இருப்பு முறையே 77,247 மெட்ரிக் தொன்கள் மற்றும் 15,419 மெட்ரிக் தொன்கள் காணப்பட்டதுடன் அவற்றில் ஜனவரி மாதத்தில் 5,436 மெட்ரிக் தொன்கள் திசெம்பர் மாதத்தில் 5,053 மெட்ரிக் தொன்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. கம்பனி 2020 ஒக்தோபர் மாதத்தில் விற்பனை செய்திருந்த 85,000 மெட்ரிக் தொன்கள் உரிய முறையில் பணம் செலுத்தி கொள்வனவாளரினால் அகற்றப்பட்டிருக்காமையால் கம்பனிக்கு சொந்தமான 60,000 மெட்ரிக் தொன் இல்மனைட் களஞ்சியப்படுத்தக் கூடிய இரண்டு களஞ்சியங்களின் கொள்ளளவினை மிகைத்திருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டு ஜனவரி முதல் மே வரை கணிசமான எண்ணிக்கையான நாட்கள் இல்மனைட் உற்பத்தி இடைநிறுத்தப் பட்டிருந்ததுடன், 2020 ஜூன் 01 திகதி | 2020 மார்ச் மாதத்தின் பல நாட்கள் கொரோனா தொற்றுநோய் காரணமாக இயந்திர அறை செயற்படாது காணப்பட்டதுடன், களஞ்சிய வசதிகள் வரையறையாக காணப்பட்டமையால் 2020 மே 31 திகதி முதல் 2021 மார்ச் 11 திகதி வரை இயந்திர அறை செயற்படாது காணப்பட்டது. அக் காலப் பகுதியில் இயந்திர அறைக்கு தேவையான திருத்த வேலைகள் மற்றும் நவீனமயப்படுத்தல் விடயங்களின் அனேகமானவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதிகள் ஏற்பட்டது. | இருப்புகள் விற்பனை செய்தவுடன் அவற்றை அகற்றிக் கொள்ளும் படி வாடிக்கையாளர்களுக்கு அறிவுருத்த வேண்டியதுடன், தாமத காலம் தொடர்பாக கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2021 மார்ச் 18 திகதி வரை Block B இயந்திர அறையின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தமையால் Block C உட்பட ஏனைய இயந்திர அறைகள் போலவே அனைத்து வளங்களும் அக்காலம் வரை விளைவற்று காணப்பட்டது.

### 3.3 கருத்து முரண்பாட்டுத்தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 மார்ச் 12 திகதி கைத்தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பணிக்கொடை வழங்கல் நடவடிக்கை முறையின் 6 – B பந்தியின் பிரகாரம் பணிக்கொடை வழங்கல் ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும் என காட்டப்பட்டியிருந்த போதிலும் அந்த நடவடிக்கை முறைக்கு புறம்பாக மீளாய்வாண்டின் போது இலாபம் ஒன்று ஈட்டியிருக்காத போதிலும் தலைமை அலுவலகத்தின் ஊழியர்களுக்கு ரூபா 10,300,000 தொகை மற்றும் புல்மோட்டை இயந்திர அறை ஊழியர்களுக்காக ரூபா 49,200,000 தொகையுமாக மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 59,500,000 தொகை பணிக்கொடை கொடுப்பனவு முற்பணம் என செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இதற்காக பணிப்பாளர் சபையினதும், அமைச்சினதும், திறைச்சேரியினதும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | இம் முற்பணத் தொகையில் 50% இற்கான அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் 2021 ஆண்டு வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைக்கக்கூடிய இலாபத்துடன் சீராக்கல் செய்யும் அடிப்படையில் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பண முற்பணம் என ரூபா 100,000 தொகை வழங்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடைக் கொள்வனவு நடவடிக்கை முறைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் தலைவரின் பாதுகாப்புக்காக ரூபா 405,956 தொகை பெறுமதியான துப்பாக்கியொன்று கொள்வனவு செய்வதற்காக இலங்கை கடற்படைக்கு முற்பணமாக 2021 ஒக்தோபர் 15 திகதி ரூபா 324,946 தொகையும் 2020 மார்ச் 04 திகதி ரூபா 81,010 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 29 திகதி அளவில் குறிப்பிட்ட துப்பாக்கி கம்பனிக்கு கிடைத்திருந்த போதிலும் 2021 மே 10 திகதி வரை பண்டங்கள் பெறல் பத்திரம் ஒன்று (GRN) வழங்கியிருக்கவில்லை. மேற்கூறிய தொகை தவிர 2020 செப்தம்பர் 30 திகதி cosmic technologies | பதில் வழங்கியிருக்கவில்லை. | பணத்தை சிக்கனமாக பயன்படுத்துவதற்கும் மற்றும் தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். |

நிறுவனத்திற்கு இதற்கான முற்பணமாக ரூபா 100,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இந்தத் கொடுப்பனவு எதற்காக செலுத்தப்பட்டதென கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. அதேபோல் துப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட வேண்டியதற்கான தேவை எது என கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியில் தற்போது காணப்படும் Block A இயந்திர அறையின் உச்சமட்ட கொள்திறனை பெற்றுக்கொள்ள முடியாமையால் ரூபா 39,481,066 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு 2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆண்டின் போது Block A புதிய இயந்திர அறையின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதில் பொருத்துவதற்காக 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 179,229,302 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள், கோகிலாய் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த இயந்திர உதிரிப்பாகங்களும் இந்த இயந்திர அறையில் பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2019 ஒக்தோபர் முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2021 ஏப்ரல் 30 திகதி வரை இந்த இயந்திர அறையின் உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது இயந்திர அறையில் உள்ள இயந்திர உபகரணங்களை புதிய இயந்திர அறையில் பொருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பெனல் போட் ஒன்றிற்கும் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. பழைய இயந்திர அறையில் உள்ள மீதியான இயந்திரங்கள் அதாவது (Spiral) புதிய இயந்திர அறையில் பொருத்தும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம Feed Rate 40% முதல் 50% இனால் அதிகரித்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இயந்திரங்களின் மூலம் உச்ச மட்ட கொள்திறனை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், உற்பத்தி விடயங்களை விரைவாக ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டின் போது கனிய மணல் நிறையக் காணப்படும் 17.6 ஹெக்டயார் காணிப் பகுதியொன்று கோகிலாய் பிரதேசத்தில் கம்பனியினால் தனதாக்கி அதற்காக ரூபா 2.25 மில்லியன் தொகை முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு 2012 ஆண்டின் போது செலுத்தியிருந்ததுடன், அதே ஆண்டில் கோகிலாய் செயற்திட்டத்திற்காக இயந்திர உபகரணங்கள் | 2013 ஆண்டு முதல் பல வருடங்களாக அந்த Spiral உற்பத்திச் செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டது. எனினும், Spiral இற்காக நீர் எடுத்துச் செல்லும் குழாய் முறைமையில் காணப்பட்ட துளைகள் சிறிதாக இருந்தமையால் அவை தொடர்ச்சியாக தடைப்படுகின்றன. அதன் காரணமாக குறிப்பிட்ட சிக்கல் | கோகிலாய் செயற்திட்டம் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன், இயந்திர உபகரணங்களையும் உற்பத்தி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்காக ரூபா 39,339,473 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. தோண்டுதல் விடயங்களுக்கு தேவையான தோண்டுதல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காமையால் மீளாய்வாண்டு வரை அப் பிரதேசத்தில் எதுவித தோண்டுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த சொத்துக்கள் அனைத்தும் புல்மோட்டை இயந்திர அறையில் ஏனைய இடங்களில் பொருத்தப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டதுடன், சில இயந்திர உபகரணங்கள் களஞ்சியத்தில் செயற்படாமல் குவிக்கப்பட்டு காணப்பட்டது. இந்த இயந்திரங்களில் 24 ஸ்பைரல்கள் Block A பழைய இயந்திர அறையில் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவையும் செயற்படக்கூடிய நிலைமையில் காணப்படவில்லை. அதேபோல் 2015 ஆண்டின் போது கோகிலாய் செயற்திட்டத்திற்காக 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் இயந்திர அறையில் பல்வேறு இடங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். அதன்படி மிகை ஊழியர் எண்ணிக்கையொன்று காணப்பட்டமையால் உற்பத்திப் பொருட்களின் கிரயம் அதிகரிப்பதற்கு அதுவும் பாதித்திருந்தது. | தொடர்பாக உற்பத்தி நிறுவனத்துடன் கலந்துரையாடிய பின்னர் அச் சிக்கலுக்குரிய தீர்வின் Drawing எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்காலத்தில் அந்த குழாய் முறைமையை மீண்டும் உரிய நிலைமைக்கு ஆக்கி உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வேண்டும். |
| (இ) | எரிபொருள் செலவினை 50 சதவீதத்தினால் சேமிக்கும் நோக்கத்துடன் ரூபா 62,370,234 தொகை பெறுமதியான டிரயர் இயந்திரம் ஒன்று 2016 ஜூன் 30 திகதி இறக்குமதி செய்து அதற்காக ரூபா 1,164,350 இற்கான தாமதக் கட்டணம் உட்பட ரூபா 43,838,767 தொகை 2020 திசெம்பர் 31 திகதி அளவில் கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்ததுடன், 5 வருடங்களை கடந்திருந்த போதிலும், இந்த இயந்திரத்தை செயற்படு நிலைக்கு மாற்றி உற்பத்தி அலுவல்களுக்கு பயன்படுத்துவதற்கு 2021 மார்ச் 21 | இதனை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வேலை விடயங்களை நடாத்திச் செல்வதற்காக தேவையான இரகசிய இலக்கம் (password) இன்மையால் எதிர்காலத்தில் அதற்கான Software மீண்டும் தயாரிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். | இயந்திரத்தை செயற்படு நிலைமைக்கு மற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை கம்பனிக்கு இயலாதிருந்த போதிலும், அது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனம் செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கம்பனியின் உற்பத்தி அலுவல்களை அபிவிருத்தி செய்வதற்காக அவசர மற்றும் அத்தியவசிய கொள்வனவு ஒன்றென கவனம் செலுத்தி ஈர மணல் இயந்திர அறைக்கு புதிய Hydroziser இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக கம்பனியினால் அவுஸ்திரேலியா மினரல் டெக்னொலொஜிஸ் நிறுவனத்தின் இலங்கை முகவர் கம்பனி மூலம் இறக்குமதி செய்வதற்காக 2014 ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டு 2016 ஜனவரி மாதம் ரூபா 15,426,302 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டு 04 வருடங்கள் கழிந்திருந்த போதிலும், இந்த இயந்திரத்தை உற்பத்தி நடவடிக்கைக்கு ஈடுபடுத்துவதற்கு 2021 மார்ச் 21 திகதி வரை கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி இந்த இயந்திரம் அவசர தேவைக்காக கெள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று அல்ல என தெளிவாகிய போதிலும் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக கம்பனி செயற்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரத்தில் நீரைப் பயன்படுத்தி பரிசோதனை மேற்கொண்டு பின்னர் மணலை பயன்படுத்தி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அடுத்த வாரத்தில் அதனை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இயந்திரத்தை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புச் சொல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2004 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த சுனாமி பேரழிவினால் புல்மோட்டை படகுக்களம் அழிவடைந்த பின்னர் கொட்வே படகுக் களமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவற்றில் காணப்பட்ட இலுவைப் படகுகள் மற்றும் படகுகள் பயன்படுத்தப்படாமல் 16 வருடங்களை விட மிகையான காலம் உக்கிய நிலையில் காணப்பட்ட போதிலும் அவற்றை சாட்டுதல் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது படகுகள் மற்றும் இலுவைப் படகுகள் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்காக நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | படகுகளை விற்பனை செய்வதற்கு, சாட்டுதல் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 03 வருடங்கள் முதல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு திருத்த வேலைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 04 வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டுள்ளன. | விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 15 திகதி முதல் 2028 ஆகஸ்ட் 15 திகதி வரையான 10 வருட காலத்திற்காக தெவிக்கல் பிரதேசத்தில் 4.5 ஹெக்டயார் விளைச்சலை உடைய படிவில் கனிய மணல் தோண்டுவதற்காக அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருந்தபோதிலும், 2021 மார்ச் வரை அதில் தோண்டுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆண்டின் மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை அந்த பிரதேசத்தில் சொரசொரப்பான மணல் தோண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திருகோணமலை புல்மூடே பிரதான பாதையில் அமைந்துள்ள பாலம் ஒன்று பழுதடைந்தமையால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அந்த அலுவல்களை தற்காலிகமாக நிறுத்தும் படி இயந்திர அறைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. தற்போது பாலத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதனால் அடுத்த இரண்டு வாரங்களில் அந்த விடயங்களை ஆரம்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. | தோண்டல்கள் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் இயந்திர அறைக்காக ரூபா 73,165,328 தொகை பெறுமதியான Wet High Intensity Magnetic Separator with a Control Panel Board இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான இறக்குமதி செயற்பாடுகளின் போது முகாமைத்துவத்தினால் உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்காமை, கேள்வி வழங்கல் 2018 பெப்ரவரி 12 திகதி வரை தாமதம் அடைதல், நாணய பத்திரம் (LC) திறத்தல் 2019 ஆகஸ்ட் 12 வரை தாமதம் | வழங்குனரிற்கு கேள்வி வழங்குவதற்காக நீதிமன்றக் கட்டளை மீது தாமதம் ஏற்பட்டதனால் அந்த கூறுவிலைகளின் கீழ் பண்டங்கள் வழங்குவதற்கு முடியாது எனவும், விலைகள் சுமார் 20% இனால் அதிகரித்துள்ளது எனவும் அறிவிக்கப்பட்டது. பின்னர் வெளிநாட்டு வழங்குனருடன் கலந்துரையாடியதன் பிரதிபலனாக கேள்வியினை வழங்கிய விலைக்கு அப்பண்டங்களை வழங்குவதற்கு வழங்குனர் இணங்கியிருந்தார். | கேள்வி வழங்கிய பின்னர் விரைவாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைதல் மற்றும் குறிப்பிட்ட திகதியில் கொள்வனவு செய்திருக்காமை ஆகிய நீண்ட தாமதங்களின் காரணமாக குறிப்பிட்ட கால வீச்சில் டொலருக்கு நேரொப்ப ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்த காரணத்தினால் கம்பனிக்கு ரூபா 11,660,234 இற்கான செலாவணி நட்டமொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | நாணயப் பத்திரம் அவர்களுக்கு கிடைத்து 26 வாரங்களுக்கு மேலதிகமாக மேலும் 08 வாரங்கள் தேவை எனவும் அதனை வழங்குவதற்கு இணங்கியமையால் LC திறக்கப்பட்டது. LC திறத்தல் அமெரிக்கா டொலர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் டொலருக்கு நேரொப்பாக ரூபா பெறுமதி அதிகரித்தல் மற்றும் வீழ்ச்சியடைதல் காரணத்தினால் ஏற்படும் செலாவணி இலாபம் அல்லது நட்டம் எங்கள் கட்டுப்பாட்டுக்கு புறம்பானவை ஆகும். | |
| (ஆ) | பல வருட காலமாக சேர்க்கப்பட்டிருந்த சேதமடைந்த இரும்பு, மண்வெட்டும் இயந்திரம், டேலர், லொறி, வாகன எஞ்சின்கள், ஸ்பைரல், டிரக்டர், வேன், சுமார் 5 JCB கள் மற்றும் ஏனைய இயந்திர உதிரிப்பாகங்கள் இயந்திர அறை வளவில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படும் சேதமடைந்த இரும்புகள் மற்றும் ஏனைய பகுதிகளை விற்பனை செய்வதற்காக தற்போது கூறுவிலைகள் அழைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அவற்றை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | அப்புறப்படுத்தல் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | இயந்திர அறைகளில் இருந்து வெளியேற்றப்படும் (வெள்ளை மணல்) இருப்பிற்கு மேலதிகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட கனிய மணல் இருப்பு கம்பனியின் விசாலமான தரைப்பகுதி ஒன்றில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் பல வருட காலம் முதல் குவிக்கப்பட்டு காணப்படுவதுடன் அந்த மணல் இருப்பினை விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் தரைப் பிரதேசத்தில் இடவசதிகள் அடைபட்டு காணப்பட்டது. | நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தவாறு துணை உற்பத்திகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்படாமல் விற்பனை செய்தல் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றை மீண்டும் சுத்திகரித்த பின்னர் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மணல் இருப்பினை விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | எம்.வீ. கொடியெலிடி கப்பலின் மொத்தப் பாரம் சுமார் 7,763 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டதுடன், அவற்றிலிருந்து அகற்றியிருந்த இரும்பு 3,120 மெட்ரிக் தொன்கள் ஆகும். 2005 ஆண்டு முதல் இதுவரை 16 | இந்த மணல் இருப்பின் உரிமை எமது நிறுவனத்திற்கு இருக்காமையால் முழுமையான உரிமை குறிப்பிட்ட தனியார் நிறுவனம் ஒன்றான ஆஷா லங்கா என்டபிரைசஸ் நிறுவனத்திற்கு உரியதாகும். | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் கடந்துள்ள போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ஆஷா லங்கா நிறுவனத்தினால் கப்பலை அப்புறப்படுத்தியிருக்காமையால் சுற்றாடல் சேதம் ஒன்று போலவே புல்மோட்டை திறந்த துறைமுகத்தின் அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் நிதிசார் நட்டமொன்றும் ஏற்பட்டிருந்தது. 2014 ஆண்டின் போது அதில் காணப்பட்ட இல்மனைட் இருப்பின் பகுதியொன்று ஆஷா லங்கா நிறுவனத்தினால் கரைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 07 வருடங்களாக கம்பனி வளவில் பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தது. | மேலும், அந்த மணலை விரைவாக அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும்படி அந்த நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டது. குறிப்பிட்ட கப்பலின் மீதியான பகுதிகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் இந்த மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு தயாராக உள்ளதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1997 திசெம்பர் 02 திகதி முதல் நிர்வாக உத்தியோகத்தர் பதவியை மேற்கொண்டிருந்த போது ஒழுக்காற்று விசாரணையின் படி 11 குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு 2017 செப்தம்பர் 15 திகதி முதல் கம்பனியின் சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் தலைவரினால் கம்பனியின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள) பதவிக்காக 2020 ஏப்ரல் 01 திகதி முதல் ரூபா 120,000 இற்கான மாதாந்தக் கொடுப்பனவிற்கும் 2020 அக்தோபர் 12 முதல் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி புல்மோட்டை இயந்திர அறையின் பிரதிப் பொது முகாமையாளர் (HMI - 3) பதவியில் பதில் கடமை ஆற்றுவதற்கும் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை படியாக ரூபா 2,052,898 தொகை கம்பனியினால் | 2020 தேர்தல் ஒன்று அறிவித்திருத்தல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் நிரந்தமாக உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்ய முடியாமையால் நிருவாக அதிகாரசபையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் ஒன்றின் படி திரு. எச்.பீ.என்.டப். அனுர குமார மேற்கூறிய பதவிக்கு 2020.04.01 திகதி முதல் ரூபா 120,000 இற்கான கொடுப்பனவு ஒன்று செலுத்துவதற்கு ப.க. பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம் மற்றும் மனித வளம்) என நியமனம் செய்யப்பட்டுள்ளது. | முறைகேடான நியமனங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. இந்த முறையற்ற நியமனத்தை சரி செய்வதற்கு மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு கம்பனியைப் போலவே அமைச்சும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் ஒன்று இன்றி தலைவரின் பிரத்தியேக உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு கம்பனியில் இருந்து 2020 மார்ச் முதல் 2021 பெப்ரவரி வரை கொடுப்பனவு என ரூபா 646,749 தொகையும், மேலதிக நேர சம்பளமாக ரூபா 500,000 தொகையும் புல்மோட்டைக்கு பிரயாணம் செய்வதற்காக ஒரு நாளைக்கு ரூபா 1,000 வீதம் ரூபா 60,000 தொகையும் ஆக மொத்தம் ரூபா 1,206,749 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பதவி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் காணப்படாத பதவியொன்றாக இருந்ததுடன், முறையற்ற விதமாக ஆட்சேர்க்கப்பட்டு அதற்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளங்கள் மற்றும் படிகளை பொறுப்புச் சொல்லவேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தலைவரின் இரகசிய செயலாளர் பதவியில் உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையால் அவ்வலுவல்களுக்காக தலைவரின் பிரத்தியேக உதவியாளர் என கடமை சாட்டப்படல் அடிப்படையில் நபர் ஒருவர் 2020.03.02 திகதி முதல் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டிருந்தது. இந்த நியமனம் 2021.06.30 திகதி முதல் செயற்படுமாறு முடிவுறுத்தப்பட்டிருந்தது. | முறைகேடான நியமனங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கம்பனியின் பதவியுயர்வுகள் வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைக்கு முரணாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி கம்பனியின் தலைவரினால் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட முறையில் என சம்பள அளவுகளை மாற்றம் செய்து பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கை முறை 2013.06.13 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதனால் அத்திகதிக்கு முன்னர் 2013.06.12 திகதி வரை செயற்படுத்தப்பட்டிருந்த பழைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறையின் பிரகாரம் தரப்படுத்தப்பட்டுள்ள உள்ளக பதவியுயர்வுகள் பெறப்பட்டுள்ளன. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைக்கு புறம்பாக செயற்படக் கூடாது. |
| (ஈ) | கம்பனியின் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவியாகிய பிரதான இரசாயனவியலாளர் பதவி 10 வருடங்களாகவும் மருத்துவ உத்தியோகத்தர் பதவி 05 வருடங்களாகவும் சிரேஷ்ட பொது முகாமையாளர் (நிதி) மற்றும் சிரேஷ்ட பொது முகாமையாளர் (மனித வளங்கள்) ஆகிய பதவிகள் 2019 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. இது வரை நிரந்தர உத்தியோகத்தர்கள் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | தற்போது கடமையாற்றும் இரசாயனவியலாளர்கள் இருவரும் ஆய்வுகூடத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். | பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் விரைவாக சேர்க்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பீடு செய்யும் போது தலைமை அலுவலகத்தில் 07 பதவிப் பெயர்களில் 13 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும், 03 பதவிப் பெயர்களில் 19 உத்தியோகத்தர்களுக்கான மிகையும் அவதானிக்கப்பட்டதுடன், புல்மோட்டை இயந்திர அறையில் 12 பதவிப் பெயர்களில் 119 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடமும் 04 பதவிப் | வரிசை அமைச்சின் அங்கீகாரத்தின் மீது எதிர்காலத்தில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க முடியும். மிகை ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக சேர்க்கப்படவில்லை. | ஊழியர் மிகைகள் ஏற்படாதவாறு வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெயர்களில் 20 உத்தியோகத்தர்களுக்கான மிகையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | ஒட்டுமொத்த நிறுவனத்தின் உற்பத்தி, நிர்வாகம், கணக்குகள் மற்றும் ஏனைய கருமங்கள் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக 2015 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படும் பொது முகாமையாளர் பதவியை நிரந்தரமாக நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் அப்பதவிகளுக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | நிறுவனத்தின் அலுவல்கள் செயலிழக்காமல் நடாத்திச் செல்வதற்காக இரண்டாம் நிலை அடிப்படையில் மற்றும் பதில் கடமை அடிப்படையில் வரிசை அமைச்சினால் பொது முகாமையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளகக் கணக்காய்வு அலகுக்காக சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர் உட்பட உத்தியோகத்தர் ஐந்து பேர் இணைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திட்டத்தின் படி போதியளவு கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் இந்த நிலைமையை குறைத்துக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வுத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(ஊ) பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படும் என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், அம்முறைமையின் வெற்றிகரமான தன்மை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையினை பயன்பதரு விதமாக நடாத்திச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது எனவும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று | கம்பனியின் அடிப்படைக் கருமங்கள் அடங்கக் கூடியவாறு ஒட்டுமொத்த முறைமை மீளாய்வொன்று 2021 ஆண்டில் மற்றும் 2022 ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான தகவல்கள் காணப்படவில்லை. மேலும், கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(4) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட விற்பனையை விட உள்ளவாறான விற்பனை ரூபா 3,964 மில்லியன் தொகையினால் அதாவது 85 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அதேபோல் நிர்வாக செலவுகள் ரூபா 79 மில்லியன் தொகை அதாவது 31 சதவீதத்தினால் சேமிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய மேந்தலை செலவுகள் பாதீட்டுத் தொகையை விட ரூபா 250 மில்லியன் தொகையினால் அதாவது 78 சதவீதம் மிகையாக செலவிடப்பட்டிருந்தது. அதன்படி பாதீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 நிலைமை மற்றும் 2020 நவம்பர் மாதம் கேள்வி வழங்கப்பட்டிருந்த போதும் இருப்பினை அகற்றியிருக்காமை வருமானம் குறைவதற்கு காரணமாக இருந்ததுடன் சராசரிச் செலவு அதிகரித்திருந்தது. | பாதீட்டு இலக்குகளின் படி செயற்பட்டு குறிக்கோள்சார் இலக்குகளை நெருங்குவதற்கு முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |